

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 157 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – தை 04 – ஞாயிற்றுக்கிழமை 18 ஜனவரி 2026 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 157 : Thiruvalluvar Year - 2057 - Thai 04 - Sunday 18 January 2026 - Madurai 12 Pages ₹ 5.00


## அதிக காளைகளை அடக்கும்

# ஜல்லிக்கட்டு மாவீரர்களுக்கு அரசுப் பணி!

## அலங்காநல்லூரில் ஜல்லிக்கட்டுப் போட்டியை பார்வையிட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

**மதுரை, ஜன. 18 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.1.2026) பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரம், தங்கக் காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.**

தமிழ்ச்சமுதாயத்தின் முக்கிய பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் விழா கொண்டாடப்படும் வேளையில் தமிழ்நாடு முழுவதிலும் காளையை இளைஞர்கள் அடக்கும் வீரத்தைப் புலப்படுத்தும் ஏறுதழுவுதல் விழா நடைபெறும். இந்த மாடுபிடி விழாவை, ஒன்றிய அரசு விலங்குகள் வதைச் சட்டத்தின் துணைகொண்டு தடைவிதிக்க முனைந்தபோது, தமிழனின் பண்பாட்டு உரிமை எனத் தன்னெழுச்சியாகச் சீறி எழுந்த தமிழ்நாட்டு இளைஞர்களால், இந்திய உச்சநீதிமன்றமே தடையை விலக்கி அனுமதி வழங்கிய வரலாறு இந்த விழாவின் வெற்றி முத்திரையாகப் புகழ் படைத்தது.

**அலங்காநல்லூரில் பிரம்மாண்ட ஏறுதழுவுதல் அரங்கம்!**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்றப் பின்னர், அலங்காநல்லூரில் பிரம்மாண்டமான ஏறுதழுவுதல் அரங்கம் அமைக்கப்படும் என்று அறிவித்து, மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் கீழக்கரையில் பிரம்மாண்ட ஏழுதழுவுதல் அரங்கம் அமைத்திட 62 கோடியே 78 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, தமிழ்நாடு அரசின் பொதுப்பணித் துறை மூலம் வாடிவாசல், ஒரே நேரத்தில் 5,000 பார்வையாளர்கள் அமர்ந்து காணும் வசதிகளுடன் மூன்றடுக்குப் பார்வையாளர் மாடம், ஏறுதழுவுதல் நடைபெறும் இடம், மிக முக்கிய விருந்தினர்கள் அமரும் இடம், ஏறு தழுவுதலில் பங்குபெறும் காளைகளின் எழுச்சி வடிவங்களைப் புலப்படுத்தும் அருங்காட்சியகம், ஒலிஒளி காட்சிக்கூடம், கால்நடை மருந்தகம், நூலகம், மாடுபிடி வீரர்களுக்கான தங்கும் அறைகள், புல்வெளிகளுடன்கூடிய தோட்டம் என அனைத்து வசதிகளுடன் 66.80 ஏக்கர் நிலப்பரப்பில், 77,683 சதுரஅடி பரப்பளவில் மிகப் பிரம்மாண்டமான கட்டடமாக ஏறுதழுவுதல் அரங்கம் கட்டி முடிக்கப்பட்டு, தமிழர்தம் மகத்தான பண்பாட்டுச் சின்னமான அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் அரங்கத்தினை 24.1.2024 அன்று முதலமைச்சர் அவர்கள் அலங்காநல்லூர் கீழக்கரை கிராமத்திற்கு நேரில் சென்று திறந்து வைத்தார். இந்த அரங்கம் ஆண்டு முழுவதும் சுற்றுலாவிற்குப் பயன்படுவதுடன், ஜல்லிகட்டு நடைபெறாத காலங்களில் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் விளையாட்டுப் போட்டிகளும் நடத்தப்படுகிறது.

**அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பரிசுகளை வழங்கினார்.**

தமிழ்ச்சமுதாயத்தின் முக்கிய பண்பாட்டுத் திருவிழாவான பொங்கல் விழா கொண்டாடப்படும் இவ்வேளையில் காளையை இளைஞர்கள் அடக்கும் வீரத்தைப் புலப்படுத்தும் ஏறுதழுவுதல் விழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று மதுரை மாவட்டம், அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டு, வெற்றி பெற்ற மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு தங்க மோதிரம், தங்கக் காசு உள்ளிட்ட பல்வேறு பரிசுப் பொருட்களை வழங்கி வாழ்த்தினார்.

அலங்காநல்லூர் ஏறுதழுவுதல் போட்டியில் இறுதியாக வெற்றி பெறும் மாடுபிடி வீரர்கள் மற்றும் காளையின் உரிமையாளர்களுக்கு கார், டிராக்டர், மோட்டார் சைக்கிள் போன்றவை பரிசாக வழங்கப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

**இந்நிகழ்ச்சியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-**

உங்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம். அதே நேரத்தில், உங்கள் அனைவருக்கும் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளையும், புத்தாண்டு வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இந்த மதுரை மண் என்பது, வீரம் விளைந்த மண்ணாகும். அப்படிப்பட்ட இந்த மண்ணின் வீரவிளையாட்டான உலகப் புகழ் பெற்றிருக்கக்கூடிய அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டைப் பார்க்கும்போது நமக்கெல்லாம் வீரம் வருகிறது. அதனை அடக்குகின்ற காளையர்களை பார்க்கின்றபோது நம்முடைய தமிழ் மண்ணுக்கு பெருமையாக இருக்கிறது.

நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், இந்த வீரம் விளைந்த மதுரை மண்ணில், சங்கம் வளர்த்த இந்த மாமதுரையில், அறிவு வளர்ச்சிக்காக "கலைஞர் நூற்றாண்டு நூலகம்" கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்பது உங்களுக்கு எல்லாம் தெரியும்.

அதேபோல, தமிழர்களின் அடையாளமான இந்த வீர விளையாட்டுக்கு "கலைஞர் நூற்றாண்டு ஏறுதழுவுதல்" அரங்கமும் கட்டிக் கொடுத்திருக்கிறோம் என்பதும் ஒரு மிகப் பெரிய சாதனையாகும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (17.1.2026) பொங்கல் திருநாளையொட்டி மதுரை மாவட்டத்தில் உலகப் புகழ்பெற்ற அலங்காநல்லூர் பகுதியில் நடைபெற்ற ஏறுதழுவுதல் போட்டியை பார்வையிட்டார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, முனைவர் பழனிவேல் தியாகராஜன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் தங்க தமிழ்ச்செல்வன், சு.வெங்கடேசன், சட்டமன்ற உறுப்பினர்கள் கோ.தளபதி, ஆ.வெங்கடேசன், பூமிநாதன், மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### ஆணவக் கொலைக்கு எதிராக கர்நாடகாவில் விரைவில் தனிச் சட்டம்!

பெங்களூரு, ஜன. 18 –

கர்நாடகாவில் சாதி, மத, ஆணவ கொலைகளை தடுக்கும் நோக்கில் தனிச்சட்டம் கொண்டுவர மாநில அரசு முடிவெடுத்துள்ளது.

கர்நாடக மாநிலத்தில் அண்மைக் காலமாக சாதி, மதம் கடந்து காதல் திருமணம் செய்யும் தம்பதிகள் கொல்லப்படுவது அதிகரித்து வருகிறது. இதுதொடர்பாக கர்நாடக உள்துறை அமைச்சர் பரமேஷ்வரா, சமூக நலத்துறை அமைச்சர் எச்.சி. மஹாதேவப்பா உள்ளிட்டோரும் முதல்வர் சித்த ராமையாவிடம் கோரிக்கை விடுத்தனர்.

இந்நிலையில் ஆணவ கொலைகளை தடுக்க தனிச்சட்டம் கொண்டு வருவதற்கான மசோதாவை தயாரிக்கும்படி சித்த ராமையா சட்ட அமைச்சகத்துக்கு உத்தரவிட்டார். இதற்கான சட்ட மசோதா கடந்த மாதம் தயாரான நிலையில், அது குறித்து அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதித்து, ஒப்புதல் பெற முடிவெடுக்கப்பட்டுள்ளது.

ஆணவக் கொலையில் ஈடுபடும் குற்றவாளிக்கு 5 ஆண்டுகள் முதல் 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

அபராதமாக ரூ.1 லட்சம் முதல் ரூ.3 லட்சம் வரை விதிக்கப்படும். காதலர்கள் தங்களுக்கு பாதுகாப்புக் கோரி, காவல் நிலையத்தில் புகார் அளித்த 6 மணி நேரத்துக்குள் மாவட்ட நிர்வாகம் அவர்களுக்கு உரிய பாதுகாப்பை வழங்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மசோதா வரும் பட்ஜெட் கூட்டத்தொடரில் தாக்கல் செய்யப்படும் என கூறப்படுகிறது.

### காஷ்மீரில் தீவிரவாதிகளின் 3 புகலிடங்கள் தகர்ப்பு!

ஜம்மு, ஜன. 18 –

ஜம்முகாஷ்மீரின் கதுவா மாவட்டத்தில் உள்ள பில்லவார் பகுதியில் தீவிரவாதிகளைத் தேடும் பணியில் நேற்று முன்தினம் பாதுகாப்புப் படையினர், போலீஸார் ஈடுபட்டிருந்தனர்.

நேற்று அதிகாலை ஒரு மறைவிடத்தில் பதுங்கியிருந்த தீவிரவாதிகள், பாதுகாப்புப் படையினர் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியபடி தப்பிவிட்டனர்.

இதையடுத்து பாதுகாப்புப் படையினர் தொடர்ந்து தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

அப்போது பில்லவார் பகுதியில் கமாத் நல்லா, காலாபான், தாநு பரோல் ஆகிய இடங்களில் இருந்த தீவிரவாதிகளின் மறைவிடங்களை பாதுகாப்புப் படையினர் தகர்த்து அழித்தனர்.

## திருவள்ளுவர் தினத்தையொட்டி

# அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட 13 பேருக்கு விருது!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

**சென்னை, ஜன. 18 -**

**முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.1.2026 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், திருவள்ளுவர் திருநாளையொட்டி தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் தமிழ் மொழிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும், தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமைச் சேர்த்த தமிழறிஞர்களுக்கு 2026ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது, 2025ஆம் ஆண்டுக்கான தந்தை பெரியார் விருது, அண்ணல் அம்பேத்கர் விருது, பேரறிஞர் அண்ணா விருது, பெருந்தலைவர் காமராசர் விருது, மகாகவி பாரதியார் விருது, பாவேந்தர் பாரதிதாசன் விருது, தமிழ்த்தென்றல் திரு.வி.க. விருது, முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ.விசுவநாதம் விருது, முத்தமிழறிஞர் கலைஞர் விருது, 2025ஆம் ஆண்டுக்கான இலக்கிய மாமணி விருது மரபுத்தமிழ், ஆய்வுத் தமிழ் மற்றும் படைப்புத்தமிழ் ஆகிய வகைப்பாட்டில் மூன்று விருதுகள், என மொத்தம் 13 விருதுகளை விருதாளர்களுக்கு வழங்கி சிறப்பித்தார்.**

தமிழ்ப் புலவர்களையும், தமிழறிஞர்களையும் பெருமைப்படுத்தும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தைத்திங்கள் இரண்டாம் நாளை திருவள்ளுவர் திருநாள் எனக் கடைப்பிடிக்க ஆணையிட்டார். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பெருமுயற்சியால் தொன்மையும், இலக்கிய வளமும் நிறைந்த தமிழ் மொழியானது 2004ஆம் ஆண்டு ஒன்றிய அரசால் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசும், தமிழறிஞர்களையும், தமிழ்ச் சான்றோர்களையும் சிறப்பிக்கும் விதமாக, மகாகவி பாரதியாரின் நினைவு நாளான செப்டம்பர் 11ஆம் நாள், அரசின் சார்பில் ஆண்டுதோறும் 'மகாகவி நாளாக' கடைப்பிடிக்க உத்தரவிட்டு செயல்படுத்தி வருவது, தமிழ் எழுத்தாளர்களை ஊக்குவித்து சிறப்பிக்கும் வகையில், "இலக்கிய மாமணி விருது" என்ற புதிய விருது தோற்றுவிப்பு, ஞானபீடம், சாகித்ய அகாடமி போன்ற தேசிய விருதுகள்,

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.1.2026 அன்று சென்னை, வள்ளுவர் கோட்டத்தில், திருவள்ளுவர் திருநாளையொட்டி தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில், 2025–ஆம் ஆண்டுக்கான பேரறிஞர் அண்ணா விருது மற்றும் விருதுத் தொகையாக 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலை, ஒரு சவரன் தங்கப்பதக்கம், தகுதியுரை ஆகியவற்றை நீர்வளம் மற்றும் சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்களுக்கு வழங்கி, பொன்னாடை அணிவித்து சிறப்பித்தார். உடன் அமைச்சர்கள் மு.பெ. சாமிநாதன், பி.கே.சேகர்பாபு, சிவ.வீ.மெய்யநாதன், மருத்துவர் மா.மதிவேந்தன், மேயர் திருமதி ஆர்.பிரியா, மரு.நா.எழிலன் எம்.எல்.ஏ., தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.